காஞ்சிபுரம் தொகுதி – வாலாஜாபாத் ஒன்றியம்

பள்ளம்பாக்கம் கிராமத்தில் புதிய மின் மாற்றி அமைத்ததற்கு நன்றி!

சட்டப்பேரவையில் சி.வி.எம்.பி.எழிலரசன் பேச்சு!

சென்னை, ஏப். 18-

காஞ்சிபுரம் தொகுதி, வாலாஜாபாத், பள்ளம் பாக்கம் கிராமத்தில் புதிய மின் மாற்றி அமைத்ததற்கு நன்றி என்று கேள்வி நேரத்தின் போது உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் தெரிவித்தார்.

இது பற்றிய விபரம் வருமாறு:

சி.வி.எம்.பி எழிலரசன்: காஞ்சிபுரம் தொகுதி, வாலாஜாபாத் ஒன்றியம், பள்ளம்பாக்கம் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி: காஞ்சிபுரம் தொகுதி, வாலாஜாபாத் ஒன்றியம், பள்ளம்பாக்கம் கிராமத்தில் மின் தேவை அதிகரித்த காரணத்தினால் கூடுதலாக புதிய 63 கே.வி.ஏ. மின் மாற்றி நிறுவப்பட்டு, 12-2-2025 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு, இரண்டு மின்மாற்றிகள்மூலம் தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சி.வி.எம்.பி எழிலரசன்: இக்கேள்வி 2023 ஆம் ஆண்டு எழுப்பப்பட்ட கேள்வி. இப்போது எதையும் கேட்கின்ற, அத்தனையும் வழங்குகின்ற ஆட்சியாக நம்முடைய கழகத் தலைவர் அவருடைய ஆட்சி விளங்குவதால் அது நிறைவேற்றப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இன்னும் சில இடங்களில் அதுபோன்ற கோரிக்கைகள் இருக்கின்றன. அதை

அவருடைய பரிசீலனைக்கு கொண்டு செல்ல விரும்புகிறேன். காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மன் சன்னதித் தெரு, அருட்பெரும்செல்வித் தெரு, இரயில்வே சாலை, SMG நகர், திருவீதி பள்ளம், திருப்பத்திகுன்றம் அம்பேத்கர் நகர், விக்னேஷ்வரா நகர், செவிலிமேடு, DAVC Vigilance Office, களியனூர், தேனம்பாக்கம் விஷ்ணு நகர் ஆகிய முக்கிய பகுதிகளில் எல்லாம் அதிக அளவில் மக்கள் தொகை பெருக்கம், கூடுதலான மின்தேவை என்று வருகிற போது அங்கே குறைந்த மின் அழுத்தம் ஏற்படுகிற காரணத்தினால் கூடுதல் மின்மாற்றி அமைத்து தந்து, அதை நிவர்த்தி செய்வதற்கு அரசு முன்வருமா என்றுஅறியவிரும்புகிறேன்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி: காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 242 புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. கூடுதலாக 10 மின்மாற்றிகள் அமைக்கப் படக்கூடிய பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் பல்வேறு இடங்களை சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி, அங்கே இருக்கக்கூடிய மின் பளுவினை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவை ஏற்படின் நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சி.வி.எம்.பி. எழிலரசன்: நான் தொடக்கத்திலே குறிப்பிட்டதைப்போல, அதிகளவில் மின்மாற்றிகளை வழங்கி இருக்கக்கூடிய அரசு நம்முடைய அரசு என்று மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்று, அதே நேரத்தில் காஞ்சிபுரம், கீழ்கதிர்ப்பூர் கிராமத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு அமைக்கப்பட்ட அண்ணா பட்டு பூங்கா, கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் தனியார் பங்களிப்புடன் அதிகளவு உற்பத்தியைச் செய்து, பட்டு கைத்தறி நெசவு தொழிற்கூடமாகவே மாறி வருகிற காரணத்தினால், அங்கு அதிகளவில் மின் தேவை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அதற்கு அருகில் இருக்கக்கூடிய பகுதிகளில் தான் தற்போது குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான 2,000-க்கும் மேற்பட்ட வீடுகள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் ஏற்கெனவே விவசாய பெருங்குடி மக்களுக்கும், கீழ்கதிர்ப்பூர் கிராமத்தைச் சுற்றி இருக்கக்கூடிய பல கிராமங்களுக்கும் மின் தேவை அதிகரித்திருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு அங்கே 110/33KV துணை மின் நிலையம் அமைப்பதற்காக, தேவைப்படும் இடமானது ஏற்கெனவே நில ஆர்ஜிதம் செய்து அங்கே தயார் நிலையில் இருக்கிறது. அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைப்பது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, அதை விரைவாக அமைத்துத் தர முன்வருவாரா?

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி: ஒட்டுமொத்தமாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் அதிகரித்து வருகின்ற மின்தேவையைக் கவனத்தில்கொண்டு, துறையினுடைய ஆய்வுக் கூட்டங்களில் அதிகாரிகளுடைய கோரிக்கைகளை ஏற்று, காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் 7 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கும், ஒரு துணை மின் நிலையம் தரம் உயர்த்துவதற்கும் முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அந்த 7 புதிய துணை மின் நிலையங்களிலும், காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பட்டு பூங்கா பகுதியில் 110KV துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த ஆண்டு அந்தப் பணிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குப் பகுதி, 57 (அ) வட்டக் கழகச் செயலாளர் பா.அண்ணாதுரை உடல் நலக்குறைவால் ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதால் அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். உடன் பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், மாமன்ற உறுப்பினர் வெ.பரிமளம், எம்.ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன், கே.ஆர்.அபரஞ்சி, டி.எஸ்.சேகர், நா.மோகன், பி.செந்தில்குமார், தேவகானம்ராஜா, பா.முத்துக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

கலாநிதி வீராசாமி எம்.பி. – கன்னிகை கோ.ஸ்டாலின் பங்கேற்பு!

பெரம்பூர் வடக்கு பகுதி திமுக சார்பில் நீர்மோர் பந்தல்!

மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

பெரம்பூர் வடக்கு பகுதிச் செயலாளர் அ. முருகன் அறிவிப்பு!

சென்னை, ஏப். 18-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கோடை வெப்பத்திலிருந்து மக்களை காக்கும் வகையில் சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் 20.04.2025 ஞாயிற்றுகிழமை காலை 11.00 மணிக்கு கீழ்க்கண்ட இடங்களில் நீர்மோர் தண்ணீர் பந்தல் திறக்கப்பட உள்ளது.

1. தலைமை: 34(அ)-வது வட்ட செயலாளர் N. கார்த்தீபன், முன்னிலை: பெரம்பூர் வடக்கு பகுதி செயலாளர் அ. முருகன் இடம்: கட்டபொம்மன் தெரு சந்திப்பு 34(அ)- வது வட்டம்

2. தலைமை: 35-வது வட்ட செயலாளர் எம். உமாபதி, முன்னிலை: பெரம்பூர் வடக்கு பகுதி செயலாளர் அ. முருகன் இடம்: வடக்கு நிழற் சாலை சந்திப்பு, முத்தமிழ் நகர் 35- வது வட்டம்

3. தலைமை: 35(அ) வட்ட செயலாளர் இரா. அரிதாஸ், முன்னிலை: பெரம்பூர் வடக்கு பகுதி செயலாளர் அ. முருகன் இடம்: எம். ஆர். நகர் 35(அ)- வது வட்டம்

4. தலைமை: 37(அ) வட்ட செயலாளர் சி.எஸ். இரவி, முன்னிலை: பெரம்பூர் வடக்கு பகுதி செயலாளர் அ. முருகன் இடம்: கண்ணதாசன் நகர், E.B.அருகில் 37(அ)- வது வட்டம்

5. தலைமை: பெரம்பூர் வடக்கு பகுதி செயலாளர் அ.முருகன் முன்னிலை: பகுதி நிர்வாகிகள் அ. ஜியாவுதீன், இரா. லீலா வேலு, எம். லதா, அ. செந்தூர்பாண்டி இடம்: 3-வது பிரதான சாலை, எம். கே.பி. நகர் மார்க்கெட்

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் பெரம்பூர் வடக்கு பகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ர.விஜய் ஆனந்த் ஏற்பாட்டில் – கே. கருணாகரன் தலைமையில் –

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில் நீர் மோர் பந்தல்!

புழல் எம்.நாராயணன், ஆர்.டி.மதன்குமார் திறந்து வைத்தனர்!

கேபிள் த.வே. கணேசன், சி.எஸ். எஸ்.டி.சீனிவாசன் பங்கேற்பு!

சென்னை, ஏப். 18-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, நீர் மோர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் கொசப்பூர் பகுதியில் உள்ள, சென்னை மாநகராட்சி பள்ளி பேருந்து நிறுத்தம் அருகே, மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில் அமைப்பாளர் ர. விஜய்ஆனந்த் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தல் திறக்கப்பட்டது.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சி. எஸ். எஸ். டி. சீனிவாசன், கேபிள் த.வே. கணேசன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம். என். அஜய் தென்னவன், எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், ஜி, ராஜேஷ் கண்ணன், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ்,க. யுவராஜ், அ. சாந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் ஆகியோர் கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்தனர். மேலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் தர்பூசணி, இளநீர், கிர்ணி பழம், வெள்ளரிக்காய், இளநீர், நீர்மோர், ரோஸ் மில்க், குளுக்கோஸ் ஆகியவற்றை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாதவரம் தெற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் வினோத், திருவெற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஸ்டாலின், புழல் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ், சோழவரம் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் மணிகண்டன், 17 ஆவது வட்டக்கழக நிர்வாகிகள் சி. பாலாஜி சி.மூர்த்தி, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவகுமார்,மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எச். பீர்முகமது, எஸ். முத்துவேல், டி. நெல்சன் ராஜ் பாக முகவர்கள் டி. திவாகர், என். நாகராஜன், வி. சுமீர், ஜி.கார்த்திக், வடபெரும்பாக்கம் எம். மைக்கேல், இ. கார்த்திக்,பி. செந்தில் ,வக்கீல் எம். என். தளபதி, அருமந்தை ஊராட்சி தலைவர் விக்ரமன், திருமலை எம். சதீஷ்குமார், தீயம்பாக்கம் ஜி. பூபாலன், இ. சுதர்சன்,எம். ஜான்சன், கொசப்பூர் இ. தேவேந்திரன், எம். விஜயன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில், பகுதி துணை அமைப்பாளர் க.யுவராஜ் ஏற்பாட்டில் வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு தலைமையில், பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன், ஆர்.டி.மதன்குமார், சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், ர.விஜய் ஆனந்த், வினோத் ஆகியோர் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து, பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் தர்பூசணி, இளநீர், கிர்ணி பழம், வெள்ளரிக்காய், குளிர்பானங்கள் ஆகியவற்றை வழங்கினார். உடன் டி.எழில்குமார், மு.விக்னேஸ்வரன், மேக்சீலா உதயகுமார், சொ.சரவணன், டி.நெல்சன்ராஜ், க.சிவகுமார், க.ந.க.சைமன், வெ. ரவி, எஸ்.முத்துவேல், எச்.பீர்முகமது, பி.குணசேகரன், ராஜேஸ்வரி, சகிலா, ஆர்.மோகன், நடராஜன், உதயகுமார், தங்கவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அம்பேத்கர் 135வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி சார்பில் அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர் இதில் பகுதி செயலாளர் நந்தனம் மதி ஜி.ஆர்.ராஜேந்திரன், டி.ராஜ வேலு மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

காரம்பாக்கம் க.கணபதி – பி.டி.பாண்டிசெல்வம் பங்கேற்பு!

மதுரவாயல் தெற்கு பகுதி 148வது வட்ட பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம்!

வட்ட கழக செயலாளர் எஸ்.ரமேஷ்ராஜ் அறிக்கை!

சென்னை, ஏப். 18-

மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும் பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. முன்னிலையில் 20/04/2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் என்.டி. பட்டேல் ரோட்டில் உள்ள கோல்டன் மஹாலில் வட்ட கழக அவைத் தலைவர் லயன் டி.தயாளன் தலைமையில் வட்ட கழக செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ் ஏற்பாட்டில் மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் மதுரவாயல் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பி.டி. பாண்டிசெல்வம் 148வது வட்டத்திற்கு உட்பட்ட 26 பாகங்களின் பாக நிலை முகவர்கள் பி.எல்.ஏ. 2, பாக நிலை குழு உறுப்பினர்கள் பி.எல்.சி. அனைவரையும் ஆய்வு மேற்கொண்டு, வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலை சந்திப்பது குறித்து ஆலோசனை வழங்க உள்ளார்கள்.

எனவே இந்நிகழ்ச்சியில் நமது 148 வது வட்ட கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கழகத் தோழர்கள் மாவட்ட பிரதிநிதிகள் மாவட்ட பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் பாக நிலை முகவர்கள் பி.எல்.ஏ.2 மற்றும் பாக நிலை குழு உறுப்பினர்கள் பி.எல்.சி. அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்ட கழக செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சென்னை வடக்கு மாவட்டம்

பெரம்பூர் வடக்கு பகுதியில் வட்டங்கள் வாரியாக நீர்மோர் பந்தல் திறப்பு!

மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர்எம்.எல்.ஏ.,அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கோடை வெப்பத்திலிருந்து மக்களை காக்கும் வகையில் சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதியில் வட்டங்கள் வாரியாக 20.4.2025 ஞாயிற்றுகிழமை காலை 10.00 மணிக்கு கீழ்க்கண்ட இடங்களில் நீர்மோர் தண்ணீர் பந்தல் திறக்கப்பட உள்ளது.

வட்டம் /பகுதி	இடம்	தலைமை
பெரம்பூர் வடக்கு பகுதி	3வது பிரதான சாலை, எம்.கே.பி. நகர் மார்க்கெட் அருகில்	அ. முருகன் பகுதி செயலாளர்
34 (அ) வட்டம்	கட்டபொம்மன் தெரு திருவள்ளுவர் சாலை சந்திப்பு	N.கார்த்தீபன் வட்ட செயலாளர்
35 வது வட்டம்	வடக்கு நிழற்சாலை சந்திப்பு, முத்தமிழ் நகர்	எம். உமாபதி வட்ட செயலாளர்
35 (அ) வட்டம்	எம்.ஆர். நகர்	இரா. அரிதாஸ் வட்ட செயலாளர்
37(அ) வட்டம்	கவியரசு கண்ணதாசன் நகர், E.B.அருகில்	சி.எஸ்.இரவி வட்ட செயலாளர்

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் நாடாளுமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள்,மாவட்ட நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள்,பகுதி நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் தெற்கு பகுதி 105வது வட்ட துணை செயலாளர் அரும்பாக்கம் எஸ்.எம்.மாறன் தாயார் எஸ்.எம்.ராஜேஸ்வரி (வயது 86) இயற்கை எய்தினார். தகவல் அறிந்ததும் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதி செயலாளர் ந. இராமலிங்கம், 105வது வட்ட செயலாளர் ந. அதியமான் எம்.சி. வட்ட கழக செயலாளர்கள் இரா.நவீந்திரகுமார், வி.எம்.சிவா மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகளும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.